
# கிருபையுள்ள வார்த்தை ®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 23 | APRIL ஏப்ரல் | 2022

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-

## ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்.

நீதிமொழிகள் 3:13


கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| ஞானமற்ற மனிதன் | 9 |
| வரலாற்றில்.. | 10 |
| சிறுவர் பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**



ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
**R. ஆண்டனி ராஜா.** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)
சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**
**Every Sundays 2pm**
**Speakers:**
**Jerry Bates & Kingsly Rajah**




**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**


**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**

**பாடல் புத்தகம்**
421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**
நமக்கு வேத வசனத்தின் ஞானத்தை போதிக்கும் சத்திய ஆவியின் வார்த்தை.

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International**

# பைபிள் எவைகளை மூடத்தனமென்கிறது...

ஆசிரியர் உரை

**P.C. பிலேமோன் ராஜா**



**கர்த்தருடைய வேதத்தின் மீது பற்றுக்கொண்ட கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் அன்பின் வாழ்த்துக்கள்.**

ஏப்ரல் மாதம் முதல் தேதியை, உலக முட்டாள்கள் தினமாக மக்கள் அனுசரிக்கின்றனர். இது வேடிக்கையான ஒன்றே. ஏனெனில் ஒருவரை திட்டவும், குறை சொல்லவும் மற்றும் மட்டம் தட்டவும் பயன்படுத்துகின்ற வார்த்தை தான் முட்டாள். மதியீனமாக நடப்பவர்கள் மற்றவர்களால், புறக்கணிக்க மற்றும் வெறுக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்காக ஒரு நாளை அனுசரிப்பது என்பது மிகவும் வேடிக்கையான ஒன்றாகவே இருக்கின்றது. ஆகையால், இந்த மாதம் உங்களுடன் பரலோக கடவுளின் வார்த்தையான பைபிள், எவைகளை முட்டாள்தனம் என்கின்றது? என்பதனை குறித்து, தியானம் செய்வோம்.

### 1. கடவுள் இல்லை என்று மறுதலிப்பதை

**சங்கீதம் 14:1** "தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை."

கடவுள் இல்லை என்று மறுதலிப்பவர்களை மதிகெட்டவர்கள் என்றும், அவ்வாறு செய்யப்படுவதை மதீயீனம் என்றும் பைபிள் உறுதியாக கூறுகின்றது. பரலோக கடவுள் தன்னுடைய இருப்பை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தியிருக்கின்றார். இந்த அண்டமும் அதனுடைய ஒழுங்கமைவும் அவைகளை படைத்தவர் ஒருவர் இருக்கின்றார் என்பதை வெளிப்படுத்துகின்றன.

யாராவது ஒருவர், உங்கள் கைகளில் உள்ள மொபைல் தானாக உண்டானது என்று உறுதியாக சொன்னால், என்ன சொல்வீர்கள்? அப்படி சொன்னவரை பற்றி என்ன நீங்கள் யாராக நினைப்பீர்கள்? அது அப்படித்தான் தானாகத்தான் உண்டானது என கூறினால், அந்த செயலை எவ்வாறாக உணர்வீர்கள்? இந்த மொபைல் தானாக உண்டாகவில்லை, இந்த நிறுவனத்தினர் உண்டாக்கினர் என உறுதியாக கூறுவீர்கள் அல்லவா? அதேபோல தான் இந்த ஒழுங்கான உலகும் தானாக உண்டாகவில்லை. தன்னை உண்டாக்கினவர் ஒருவர் இருக்கின்றார் என்பதனை நமக்கு சொல்லாமல் (பேச்சுகளின்றியும்) சொல்லி தருகின்றது. **சங்கீதம் 19:1–4** "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும், அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்."

சிலர் கடவுளை காண்பி நம்புகின்றேன் என தர்க்கிக்கின்றனர். இந்த அண்டத்தினை பார்த்து உணர்ந்துகொள் என்று சொன்னால், அது அவர்களுக்கு பைத்தியமாகவே தோன்றுகின்றது. எவரொருவரும் சுமார் 1300 கிராம் எடையுள்ள தன் மூளையை காண்பிக்க முடியுமே தவிர, அவற்றில் அறிவு எங்கே இருக்கின்றது என காண்பிக்க இயலாது. மூளைக்குள் தான் இருக்கும் என்று சொல்லத்தான் முடியுமே தவிர, காண்பிக்க இயலாது. உண்மைதான், அறிவு அதற்குள் தான் இருக்கின்றது. அதனை நாம் மறுப்பது என்பது முட்டாள்தனமாகும். அதேபோல தான் இறைமறுப்பு என்பதும், என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆகையால் தான் கடவுளின் வார்த்தையான பைபிள், கடவுள் இல்லை என்று சொல்வதை

மதியீனம் என்கின்றது. ஆகையால், எவரொருவரும் போக்குச்சொல்ல இடமேயில்லை. **ரோமர் 1:19,20** ''தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை."

## 2. மதுபானம் அருந்துவதை

**நீதிமொழி 20:1** "திராட்சரசம் பரியாசஞ் செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல."

கடவுளின் வார்த்தையான பைபிள், மது அருந்துபவர்களை மூடர்கள் என்றும், அவ்வாறு செய்வதை மூடத்தனம் என்றும் சொல்கின்றது. யாராக இருந்தாலும் சரி மது அருந்துதல் என்பது மூடத்தனமே. மேலும், அது துன்மார்க்கமான செயல் என்றும் கூறுகின்றது.

**எபேசியர் 5:18** "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து;" குடிகாரன் தான் உண்மையை பேசுவான், மனுஷன் குடிச்சாதான் உண்மை வரும் என சொல்வது எல்லாம் முற்றிலும் வடிகட்டின பொய்யாகவே உள்ளது. உண்மையில் அறிவியல் பூர்வமாக குடிக்கின்றவரின் மூளையின் செயல்பாடு என்பது பாதிக்கப்படுமே தவிர, வளர்வதும் இல்லை, அவர் ஞானம் அடைவதும் இல்லை. அது அறிவார்ந்த சமூகத்தினை அறிவுகுன்றிய மற்றும் அறிவற்ற சமூகமாக மாற்ற செய்யப்படுகின்ற பொய்யான வதந்திகள் ஆகும். **ஏசாயா 28:7** "ஆனாலும் இவர்களும் திராட்சரசத்தால் மயங்கி, மதுபானத்தால் வழி தப்பிப்போகிறவர்கள்; ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, திராட்சரசத்தால் விழுங்கப்பட்டு, சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம்போய், நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள்;"

எந்த வகையிலும் மனிதன் போதை பொருட்களை உட்கொள்வது பாவமாகவும் மற்றும் மதியீனமாகவும் உள்ளது. அது அவர்களின் வாழ்வில் பேராபத்தினையும், அவர்களை சார்ந்தவர்களுக்கு தீரா மனஉளைச்சல் மற்றும் பொருளாதாரம் சார்ந்த அநேக பிரச்சனைகளையும், போராட்டங்களையும் கொண்டு வந்து சேர்க்கும் பேராபத்தானதாகும். **எசாயா 5:11** "சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப்போகுமளவும் குடித்துக் கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ !"

சிலர் அளவாக குடித்தால் தப்பில்லை. எப்பொழுதாவது குடித்தால் தப்பில்லை என வாதிடுவர். அது போதை பொருட்களின் மீது அவர்களுக்குள்ள மயக்கத்தினை வெளிப்படுத்துகின்றது. அது அவர்களை முற்றிலும் மயக்கி அடிமைப்படுத்திவிடும் அபாயகரமானது **ஓசியா 4:11** "வேசித்தனமும் திராட்சரசமும் மதுபானமும் இருதயத்தை மயக்கும்;" நஞ்சை கொஞ்சமாகவோ அல்லது எப்பொழுதாவது குடித்தால் நன்மை பயக்குமா? நிச்சயம் கிடையாது. எந்த வகையிலும் விஷம் விஷமே. போதை பழக்கத்தினால் சீரழிந்த குடும்பங்கள் முடங்கிப்போன தொழில்கள் சிதைந்துபோன தலைமுறை என அதின் பேரழிவினை அடுக்கிக்கொண்டே போகலாம். அது இம்மையில் மாத்திரமல்ல, மறுமையின் வாழ்வையும் நரகத்தில் கொண்டு சேர்த்துவிடும். **1 கொரி 6:10** "திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை."

அவர்களின் பரிதாபகரமான நிலையை, பைபிள் பட்டியலிட்டு காண்பிக்கின்றது. **நீதிமொழி 23:29–34** "ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே, மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும் போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப் போலும், பாய்மரத்தட்டிலே, படுத்திருக்கிறவனைப் போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள் எனக்குச் சுரணையில்லை; நான் அதைப் பின்னும்

தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய் ;" அதனால் தான் கடவுளின் வார்த்தையான பைபிள், போதை பொருட்களை உட்கொள்வதை முட்டாள்தனமான செயல் என்கின்றது. எந்த வகையிலும் அதனை போதை பொருட்களை வெறுத்து, தவிர்த்து ஒதுக்குவதே ஞானமான செயலாகும்.

### 3. நாவடக்கம் இல்லாததை

**ஏசாயா 32:6** "ஏனென்றால் மூடன், மூடத்தனத்தைப் பேசுகிறான்; அவன் இருதயம் அநியாயத்தை நடப்பிக்கும்; அவன் மாயம் பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய் விபரீதம் பேசி, ஆத்துமாவை வெறுமையாக வைத்து, தாகமுள்ளவனுக்குத் தாகந்தீர்த்திருக்கிறான்."

தன் நாவை அடக்காத தன்மையை பைபிள் மூடத்தனம் என்கின்றது. தன் மனதிற்கு தோன்றியபடி, தான் விரும்பியதெல்லாம், அது நல்லதா கெட்டதா? நன்மையை உண்டாக்குமா? அழிவை உண்டாக்குமா என்பதனை பற்றி எந்த கவலையும் இன்றி, எதனை வேண்டுமானாலும் பேசுவது என்பது மூடத்தனமானது ஆகும். மேலும், பைபிள் அதனை துன்மார்க்கம் என்கின்றது. **நீதிமொழி 15:28** "நீதிமானுடைய மனம் பிரதியுத்தரம் சொல்ல யோசிக்கும்; துன்மார்க்கனுடைய வாயோ தீமைகளைக் கொப்பளிக்கும்."

வார்த்தைகளை கொட்டுவது என்பது ஞானமான செயலாக இருக்காது. ஆகையால் தான் நம்மூர் பழமொழியில்வட ''நெல்லை கொட்டினால் அள்ளிவிடலாம். சொல்லை கொட்டினால் அள்ள முடியாது" என சொல்வார்கள். நிறைய பேசுவது என்பது எந்த காலத்திலும் புத்திசாலித்தனமாக மெச்சிக்கொள்ளப்பட்டதில்லை என்பது நாம் அறிந்ததே. அதனால் தான் குறைவாக பேசு, நிறைய கேளு என சொல்லிக்கொடுத்தனர். சில நேரங்களில் பேசாமல் அமைதியாக இருப்பதும் ஞானமான செயலாக இருக்கின்றதாக சாலமோன் ஞானி கூறுகின்றார். **நீதிமொழி 17:28** "பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்; தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்."

பைபிள் நிறைய பேசுகின்றவர்கள் நீதிமானாக விளங்க முடியாது. **(யோபு 11:2).** சொற்களின் மிகுதி பாவத்தினை உண்டாக்கும். ஆகையால் புத்திமான் தன் உதடுகளை அடக்குகிறான் என்கின்றது. **நீதிமொழி 10:19** "சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்." மேலும், அலப்புகின்றவன் மூடன், அவன் விழுவான் என எச்சரிக்கின்றது. **நீதிமொழி 10:10** "கண்சாடை காட்டுகிறவன் நோவு உண்டாக்குகிறான்; அலப்புகிற மூடன் விழுவான்." மேலும், தேவையற்ற பேச்சுக்கள் நல்ல ஒழுக்கங்களை (பழக்கங்களை, குணங்களை) பாழ்படுத்திவிடுவதாக இருக்கின்றது எனவும் எச்சரிக்கின்றது. **1 கொரி 15:33** ''மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்."

என் வாய், என விருப்பபடியெல்லாம், எனக்கு தோன்றியபடியெல்லாம் பேசுவேன் என்றும், நான் மனசுல எதுவும் வச்சிக்கமாட்டேன், வெளிப்படையா பேசிவிடுவேன் என்றும் கூறுவோரே நாம் பேசுகின்ற ஒவ்வொன்றையும் கர்த்தர் கவனிக்கிறார் என்பதனையும் **(மல்கியா 3:16),** நாம் பேசுகின்றவைகள் நாம் யார் என்பதை தீர்மானிக்கின்றது என்பதனையும் **(மத்தேயு12:37),** மேலும், அவையெல்லாவற்றிற்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதனையும் மறக்க வேண்டாம். **மத்தேயு 12:34–36** "விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்?இ ருதயத்தின்நி றைவினால்வ ாய்பே பசும்.ந ல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' ஆகையால் பைபிள் நம்மை நாவடக்கத்துடன் இருக்கச் சொல்லுகின்றது. **(யாக்கோபு 3:1).** எனவே நாம் நமது வாயை அடக்குவதே ஞானமான செயலாகும் **(நீதி 0:19).**

### 4. தன் இருதயத்தினை நம்புவதை

**நீதிமொழி 28:26** "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்."

தன் இருதயத்தினை நம்புவதை, பைபிள் மதியீனம்

என்கின்றது. இருதயத்தினை பற்றி பைபிள் மிகவும் ஆழமாக மற்றும் தெளிவாக போதிக்கின்றது. மனிதன் தன் இருதயத்தினை ஏன் நம்பகூடாது? மனிதனை மண்ணினாலே உருவாக்கி, அவனுக்குள் ஜீவன் தந்த கர்த்தர், மனிதனின் இருதயத்தின் நினைவுகள் சிறுவயது தொடங்கி, நித்தமும் பொல்லாப்பானவைகளை சிந்திக்கின்றது என சொல்கின்றார். **(ஆதியாகமம் 8:21).**

இருதயம் என்பது, ஏற்கனவே நன்மைகள் நிறைத்து வைக்கப்பட்டுள்ள பொக்கிஷம் அல்ல. எனவே அதனை நம்பி நாம் செயல்படுவது ஞானமான செயலும் அல்ல. நாம் என்பதனை இருதயத்திற்கு உள்ளே அனுமதிக்கின்றோமோ? அதனை அது சேர்த்து வைக்கும் அவ்வளவு தான். மாறாக, இருதயம் என்பது பொக்கிஷம் நிறைந்திருக்கும் இடமல்ல. அதனால் "என் மனசுக்கு சரி என்று படுது" என மனதில் தோன்றுகின்ற வழியில் எல்லாம் நடக்க முடியாது. **(நீதிமொழி 14:12)** "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்."

ஆகையால் தான், சாலமோன் ஞானி எல்லா காவலோடும் இருதயத்தினை காத்துக்கொள் என்கின்றார். **நீதி 4:23** "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்." அப்படி பாதுகாக்க தவறினால், அது பாவங்கள் நிறைந்திருக்கின்ற ஒரு கூடாரமாக மாறிவிடும் அபாயம் உண்டு என ஆண்டவர் இயேசுவும் எச்சரித்தார் **(மாற்கு 7:20–23).** எப்படி பாதுகாப்பது? வசனத்தினைக் கொண்டு தான் பாதுகாக்க முடியும் **சங்கீதம் 119:9,11** "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே, நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்."

மாறாக, இருதயத்தினை சும்மா வைத்திருப்பது என்பது பேராபத்தானது. **மத் 12:43–45** "அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்; நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும், அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிககேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்.", எனவே நாம் நமது இருதயத்தினை நம்பாமல், நம் இருதயத்தினை வசனத்தின்படி சீர்படுத்த வேண்டும்.

### 5. பாவத்தில் நிலை கொண்டிருப்பதை

**நீதிமொழி 14:16** "ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான்; மதியீனனோ மூர்க்கங்கொண்டு துணிகரமாயிருக்கிறான்."

பாவத்தில் நிலைத்திருப்பதை பைபிள் மதியீனம் என்கின்றது. அதாவது ஞானமுள்ளவர்கள் கடவுளுக்கு பயந்து தீமையை (பாவத்தினை) விட்டு விலகுகிறார்கள். மதியீனரோ இன்னும் துணிகரமாக, தொடர்ந்து தீமையான பாவத்தினை செய்கின்றனர் என்கின்றது. ஞானமுள்ளவர்கள் பாவத்தினால் வரும் ஆபத்தினை உணர்ந்து, விலகி செல்கின்றனர். ஆனால், ஞானமற்றவர்களோ (பேதைகளோ) தொடர்ந்து பாவத்தில் நிலைநின்று, தண்டிக்கப்படுகின்றனர் என்றும் எச்சரிக்கின்றது. **நீதிமொழி 22:3** "விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான்; பேதைகள் நெடுகப் போய்த்

## சிறுவர்க்கான கேள்விகள்

1. யெப்தா செய்த பொருத்தனை எப்படிப்பட்டது?
2. யோசுவா செய்த மதியீனமான உடன் படிக்கையால் நடந்தது என்ன?
3. கர்த்தர், சுயநலமாக வாழ்வதை என்னவென்று சொல்கின்றார்?
4. சவுல்ராஜா செய்த மதியீனமான செயல் என்ன?
5. சவுல்ராஜா அதினால் இழந்தது என்ன?

தண்டிக்கப்படுகிறார்கள்."

பைபிள் விட்டுவிட்ட பாவங்களை தொடர்வதும் மதியீனம் என்று சொல்வதை கவனிக்க வேண்டும். **நீதிமொழி 26:11** "நாயானது தான் கக்கினதைத் தின்னும்படி திரும்புவதுபோல, மூடனும் தன் மூடத்தனத்துக்குத் திரும்புகிறான்." மேலும், பாவங்களை விரும்புவது என்பது மதீயினத்தையும் அவமானத்தினையும் விரும்புவதாக உள்ளதாக சொல்கின்றது. **நீதிமொழி 1:22** "பேதைகளே, நீங்கள் பேதைமையை விரும்புவதும், நிந்தனைக்காரரே நீங்கள் நிந்தனையில் பிரியப்படுவதும், மதியீனரே, நீங்கள் ஞானத்தை வெறுப்பதும், எதுவரைக்கும் இருக்கும்." பாவத்தினை செய்வதும், அதில் நிலைநிற்பதும் ஞானமற்ற செயல் மாத்திரமல்ல, ஆத்துமாவை கெடுத்துப்போடுகின்ற செயலாகவும் இருக்கின்றது **(நீதிமொழி 6:32).** ஆகையால், பாவத்தில் நிலைநிற்காமல் உடனே மனந்திருந்தி, மறுவாழ்வு பெறுவோம். அதுவே ஞானமான செயலாகும்.

இறுதியாக,

அன்பானவர்களே, கடவுளின் வார்த்தையான பைபிள் எதனை மதியீனம் என்கின்றதோ, அது எல்லா காலங்களிலும், எல்லா மனிதர்க்கும், எல்லா சூழலிலும் மதியீனமாகவே இருக்கின்றது. ஒருக்காலும் அது ஞானமானதாக இருக்காது. ஆகையால் பேதைமை போக்கி, நம்மை ஞானவாள்களாக்குகின்ற கர்த்தருடைய வார்த்தைக்கு நம் இருதயத்தினை திருப்புவோம். **சங்கீதம் 19:7** "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது." மேலும், திருவசனம் காண்பிக்கின்ற வழியிலே நடப்போம். அது போதிக்கும் வாழ்வியலை வாழ்வோம். அதுவே நமக்கு பாதுகாப்பானது. **ஏசாயா 35:8** "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை." வேத வசனங்கள் சொல்கின்றபடி நாம் நம்மை சீர்திருத்தி, அதின் வெளிச்சத்தில் ஞானத்தினை குறைவின்றி கொடுக்கின்ற கர்த்தரிடம் பெற்றுக்கொள்வோம். **(யாக்கோபு 1:5).** கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து, நாம்

அன்புடன்,
**–ஆசிரியர்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : 92 4421 4421 & 92 4431 4431) **Nambikai TV :** Every Sunday 3.30 p.m. **Salvation TV :** Every Sunday 2.00 p.m.

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# மதியீனமான பெண்கள்

சகோதரி : பேபி ராஜா



அன்பான சகோதரிகள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம், வேதாகமத்தில் மதியீனமாக நடந்த பெண்களிடமிருந்து, நாம் நமக்கான ஞானமான பாடங்களை கற்றுக்கொள்ளலாமா?

### 1. ராகேல்

கர்த்தர், யாக்கோபை அழைத்து அவனை ஆசீர்வதித்து, இரண்டு பெரிய பரிவாரங்களுடன் கானான் தேசத்திற்கு அழைத்து வந்தபோது, ராகேல் தன் தகப்பனுடைய வீட்டில் இருந்த விக்கிரங்களை திருடிக் கொண்டு வந்தாள். தன் தகப்பன் வந்து கேட்டபொழுது பொய்யாக நடித்து தகப்பனை ஏமாற்றினாள். விக்கிர வழிபாடு என்பது பாவம் என அவள் அறிந்திருந்தும் அதனை செய்தாள் **(ஆதியாகமம் 31:33–35).**

என்ன ஆனது? கர்த்தருடைய கோபத்திற்கு ஆளாகி, கானானிற்குள் ஆசீர்வாதமாக வாழ வேண்டியவள். எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமிற்குள் நுழையும் முன்பே, பென்யமீனை பெற்று மரித்துப்போனாள். ஆண்டவர் பிறக்க போகின்ற பூமியில் அவள் காலடிகூட படவில்லை. ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவார். நாம் அவரது கரங்களுக்குள் அடங்கியிருக்க வேண்டும். ஏனெனில் அவர் நம்மீது அக்கறை உள்ளவர் **(1 பேதுரு 5:6,7).** மாறாக, விக்கிரங்கள் தன் வாழ்வை உயர்த்தும் என நம்பி, வீணாய் போன, ராகேலின் மதியீனமான சிந்தையும், செயலும் நமக்குள் வராதபடி எச்சரிக்கையாயிருப்போம். நமது கர்த்தர் தருகின்ற ஆசீர்வாதம் வேதனை அற்றதாக இருக்கும். **நீதிமொழி 10:22** "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் அதனோடே அவர் வேதனையைக் கேட்டார்.".

### 2. யேசபேல்

யேசபேல், இஸ்ரவேலின் அரசனான ஆகாபின் மனைவியானவள். கர்த்தர் தங்களை பெரிதும் ஆசீர்வதித்திருந்தும், ஆகாப், நபோத்தின் இடத்தின் மேல் ஆசைப்பட்டான். அவன் தர மறுத்தது ஆகாபிற்கு துக்கமாக இருந்தது. இதனை அறிந்த யேசபேல், கர்த்தர் தங்களுக்க கொடுத்த அதிகாரம் என்பது பயபக்தியுடன் செய்ய வேண்டிய பொறுப்பு என்பதை மறந்து, தன் அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தினாள். நாபோத்தினை அநியாயமாக கொன்று, அவன் இடத்தினை அபகரித்து தன் கணவனுக்கு கொடுத்தாள் **(1 ராஜாக்கள் 21).**

என்ன ஆனது? யேசபேலின் இந்த மதியீன செயல், அவளும் அவள் கணவனும் அவர்களது சந்ததியும், அவர்கள் மிருக ஜீவன் உட்பட எல்லாம் கர்த்தரின் கோபத்திற்கு இரையானது. அரசான ஆகாப் மற்றும் அரசியாகிய யேசபேல் மரித்தும் அவர்கள் பிணங்கள் கல்லறைக்கு செல்லாமல், நாய்களுக்கு உணவானது. எவ்வளவு பயங்கரமான தண்டனை இது.

காரணம் என்ன? பிறர் பொருளை இச்சித்து, அவரை அநியாயமாக கொன்று, அபகரித்ததின் விளைவு தான் இது. நமது கர்த்தர் திக்கற்றவர்களின் கடவுளாக இருக்கின்றார். அதிகார போதை கண்களை குருடாக்கி, இஷ்டபடி வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் இது பேரிடியான எச்சரிக்கையாகும். நமக்கு கர்த்தர் கொடுத்துள்ளவைகள் போதும் என வாழும்போது. அந்த வாழ்வின் பயணத்தில் அவர் நம்மோடு எப்போதும் இருக்கின்றார் என்பதனை நினைவில் கொள்வோம். **எபிரேயர் 13:5** ''நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே."

ராகேல் மற்றும் யேசபேலை போன்று மதியீனமான சிந்தை பேச்சு மற்றும் செயல்களுக்கு நம்மை விலக்கி காப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

# ஞானமற்ற மனிதன்

அன்பான வாலிப தம்பி தங்கைகளுக்கு, கர்த்தருடைய பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

சவுலின் காலத்திலிருந்து வடக்கு ராஜ்ஜியம் மற்றும் தெற்கு ராஜ்ஜியம் இரண்டையும் கலைக்கும் வரை இஸ்ரவேலின் சிம்மாசனத்தில் பல மன்னர்கள் அரியணை ஏறினர். இருப்பினும், சாலமோன் பெற்ற அதிகாரத்தையும் கௌரவத்தையும் இந்த அரசர்கள் யாரும் பெறவில்லை. சாலமோன் இஸ்ரவேலின் எல்லையை தெற்கே செங்கடலில் இருந்து வடக்கே யூப்ரடீஸ் நதி வரை விரிவுபடுத்தினார். இஸ்ரவேலின் பொற்காலம் தாவீது மன்னரின் கீழ் துவங்கி, சாலமோனின் கீழ் தொடர்ந்தது. சாலமோன் இஸ்ரவேலின் ராஜாவாக ஆட்சி செய்த நாற்பது ஆண்டுகளில், அவருடைய பரந்த பிரதேசம் முழுவதும் அமைதியும் ஒற்றுமையும் நிலவியது. தேவன் அவருக்கு ஞானத்தை அருளியிருந்தார். அதனிமித்தமாக அவன் பிரசித்தி பெற்ற மனிதனாயிருந்தான்.

இப்படி ஞானமும், அறிவுமுள்ள சாலமோன், தன்னுடைய வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு முடிவை எடுக்கும் வேலையில், அறிவிலியாக (முட்டாள்தனமான), கவனமில்லாத ஒரு முடிவு எடுக்கின்றான். அவனுடைய திருமணத்திற்கான முடிவில் தேவபிள்ளைகளை தேடாமல், அந்நிய பிள்ளைகளை, அதாவது உலக வழிபாட்டில் உள்ள தேவன் விருப்பமற்ற ஒன்றை தேர்வு செய்கின்றான்.

விக்கிரக வழிபாட்டிலுள்ள பெண்களை நேசித்தான். அவர்களை திருமணம் செய்தான். தெய்வமல்லாத ஒன்றிற்கு வழிபாடு செய்தான். இதனால் கர்த்தருடைய கிருபையால் ஞானியென்று பெயர் பெற்ற சாலமோன் தனது முட்டாள்தனமான முடிவினால் ஒரு தவறை செய்து மூடன் என்று எல்லாருக்கும் வெளிப்படுத்தினான். தனக்கு பிடித்தது என்று சாலமோன் நினைத்த ஒன்று, தேவனுக்கு முன்பாக அருவெறுப்பாக உள்ளது. நாமும் உலகத்தோடு உறவாட, கிறிஸ்துவை விட்டுவிட்டு வேறொன்றை நம்பும்போது முட்டாள்தனமான முடிவெடுத்தவர்களாகின்றோம்.

பணம், பதவி, படிப்பு, உயர்வு எல்லாமே ஒரு நாளும் ஞானத்தை பெற்றுத்தராது. அவை உலக அறிவையும், வசதியையும் பெருக்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. ஆனால், தேவவார்த்தையை விசுவாசித்து தேவனுக்குப் பிரியமாக முடிவுகளை எடுக்கும்போது அது ஆசீர்வாதமாகவும், ஞானமான முடிவாகவும் இருக்கும்.

எனக்கன்பான வாலிபர்களே, திருமணம் என்கின்ற போது நீங்கள் எப்படிப்பட்ட முடிவுகளை எடுக்கின்றீர்கள். என் அந்தஸ்துக்கு Equalஆன ஒரு ஆண், அவர்கள் எந்த வழிபாட்டினராயிருந்தாலும் OK இது எல்லாமே முட்டாள்தனம். கடவுளை நேசிக்கின்ற பிள்ளைகள் தான். பெண்ணோ, ஆணோ தேட வேண்டும். அதில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இல்லாமல் பார்க்க வேண்டும். எனக்கு பிடிச்சிருந்தா போதும், மற்ற யாருடைய அபிப்பிரயாத்தைப் பற்றி எனக்கு கவலையில்லை என்று நினைப்பது மாபெரும் முட்டாள்தனம்.

உடை உடுத்துவதிலிருந்து, வாழ்க்கைத் துணையை முடிவு செய்வது வரை கடவுளின் வார்த்தைப்படி இருப்பதுதான் ஞானமுள்ள வாழ்க்கை. முட்டாள்தனமான முடிவெடுத்து வீழ்ந்துபோன சாலமோன் போலல்ல. ஞானமாய் நடந்து தேவ வார்த்தையின்படி முடிவெடுக்கும் தேவப் பிள்ளைகளாயிருப்போம்!

– உங்கள் அண்ணன்

**JP**

இம்மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாளைக் காணும் வாசகர்கள் அனைவருக்கும் கிருபையுள்ள வார்த்தை ஆசிரியர் குழுவின் சார்பாக வாழ்த்துக்களும், ஜெபங்களும் !

பாடம் - 2

## ஆதி கிறிஸ்தவ பதிவேடுகள்

### Early Christian Documents

தொடர்ச்சி...

கி.பி. 150ல் டைர்போ என்பவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது நடந்தவைகளை, ஜஸ்டின் பின்வருமாறு எழுதுகிறார். “அவர் பிறந்த போது, அரபியாவிலிருந்து வந்த சாஸ்திரிகள் அவரைத் தொழுது கொண்டார்கள். முன்பு ஏரோதுவினிடத்தில் வந்து, பிறகு உங்கள் நாட்டுக்கே முதன்மையான ராஜாவானார்.”

“அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தபோது, ஆணிகடாவி அவருடைய கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்; அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் அவருடைய அங்கியைக் குறித்துச் சீட்டுப்போட்டு, அவர்களுக்குள் கிடைத்த பங்கை எடுத்துக் கொண்டார்கள்.”

“கர்த்தர் மரத்தின்மேல் ஏறத்தாழ சாயங்காலம் வரைத் தொங்கிக் கொண்டிருந்தார்; அந்த மாலைப் பொழுதிலேயே அடக்கம் பண்ணப்பட்டார்; பிறகு மூன்றாம் நாளில் அவர் மறுபடியும் உயிரோடு எழுந்தார்.”

ஜஸ்டின் கி.பி. 150ல், அந்தோனி பயஸ் என்பவருக்கு எழுதிய தனது கடிதத்தில், “எருசலேமிலிருந்து முப்பத்தி ஐந்து ஸ்தாதி தொலைவில் உள்ள ஒரு யூதர்கள் நாட்டுக் கிராமத்தில், இயேசு கிறிஸ்து பிறந்தார். இதை யூதேயாவிலிருந்த, உங்கள் முதல் ரோம அதிகாரி சிரேனியுவின் காலத்தில் இருந்த வரி செலுத்தப்பட்ட பதிவேடுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.”

“அதேபோல, அவர் சிலுவையில் அறையப்பட்ட பின், அவருடைய சகாக்களே அவரைக் கைவிட்டு விட்ட பொழுது, அவரை மறுதலிக்கவும் செய்தனர்; அதன்பிறகு, மரித்தோரிலிருந்து அவர் எழுந்து அவர்களுக்குக் காணப்பட்டார். அவர்கள் தீர்க்க தரிசனங்களை படித்துப் பார்த்தால் அவற்றில் சொல்லப்பட்டவைகளெல்லாம் நிறைவேறுகின்றதை அறிவார்கள் என்று சொன்னார் அவர்கள் அவர் பரமேறுவதைக் கண்டபோது, அவரை விசுவாசித்தார்கள்; அவராலே அனுப்பப்பட்ட பெலனையும் பெற்றார்கள்; மேலும் அவர்கள் ஒவ்வொரு தேசத்தாரிடத்திலும் போய், இவைகளைப் போதித்தார்கள். அவர்கள் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.”

### ரோமபுரியின் நிலத்தடிக் கல்லறைகள்

ரோமபுரிக்குக் கீழ், ஏறத்தாழ 600 மைல் தூரத்திற்கு பூமியின் கீழ்ப் பகுதிகளில் லட்சக்கணக்கான கிறிஸ்தவக் கல்லறைகள் இருக்கின்றன. இந்த நிலத்தடிக் கல்லறைகள் இரண்டாம் நூற்றாண்டிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டுகள் வரையிலான காலக் கட்டத்தில் கல்லறைகளாகவும், உபத்திரவ நேரங்களில் தொழுகை செய்யும் இடங்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

இந்தக் கல்லறைகள் வரைபடங்கள் (ஓவியங்கள்) மற்றும் கல்லறை வாசகங்கள் நிறைந்தவை களாயிருந்ததன் மூலம், ரோம சாம்ராஜ்யத்தின் தலை நகரில் கிறிஸ்தவர்களின் ஆழமான விசுவாசம் தெரிய வருகிறது. பொதுப் படையாக பொறிக்கப்பட்டிருந்தவைகளில் ஒன்று மீன் உருவம், பெரும்பாலும் மீன் எனும்பதத்திற்கு “இஷ்துஸ்” எனும் கிரேக்க வார்த்தையைக் கொண்டிருந்தன. இந்த எழுத்துக்கள் இசியோஸ் கிறிஸ்டோஸ் என்னும் வார்த்தை வடிவ எழுத்துக்களின் கூட்டாகப் பொறிக்கப்பட்டன. தியோ யூயாஸ், என்றும் எழுதப் பட்டவை “தேவனுடைய குமாரனும் இரட்சகருமாகிய, இயேசு கிறிஸ்து'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நீங்கள் ரோமாபுரிக்கு எப்பொழுதாகிலும் போவீர்களானால் இந்த நிலத்தடிக் கல்லறைகளைப் போய் பார்வையிடுங்கள், அப்பொழுது நீங்களே அறிவீர்கள்.

- அடுத்த இதழில் தொடரும்...

# மதியீனமான பொருத்தனை...

கடவுளுக்கு பிரியமான செல்லங்களே, உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்? இப்பொழுது நாம் யெப்தா என்ற அண்ணனைப் பற்றி கற்றுக்கொள்ளலாமா?

பிள்ளைகளா, இஸ்ரவேல் நாட்டிலே, கீலேயாத்திலே யெப்தா என்ற ஒரு அண்ணன் இருந்தாங்க, அவங்க பெரிய பராக்கிரமசாலியாக இருந்தாங்க. ஆனால் அந்த அண்ணனை வீட்டை விட்டு துரத்திவிட்டாங்க. அதனால் யெப்தா அண்ணன் தோப் தேசத்திற்கு போய் அங்கே குடியிருந்தார்.

சில ஆண்டுகள் கழித்து, கீலேயாத் பட்டணத்தினை பிடித்துக்கொள்ள அம்மோன் நாட்டினர் யுத்தம் செய்ய வந்தனர். அதனால் அந்த ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி யெப்தாவை அழைத்தால் நமக்கு உதவி செய்வார் என்று முடிவெடுத்தார்கள். உடனே அந்த பட்டண மூப்பர் யெப்தாவை அழைத்து அம்மோன் புத்திரரோடு யுத்தம் செய்ய சொன்னார்கள். அதற்கு யெப்தா, நீங்கள் தான் என்னை என் சகோதரன் வீட்டிலிருந்து நான் வெளியேற காரணமானவர்கள் என்றான். இப்பொழுது, நான் அம்மோன் புத்திரரை ஜெயித்தால் என்னை உங்களுக்கு தலைவனாக்குவீர்களா? என்று கேட்டார். அவர்கள் அனைவரும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள்.

உடனே யெப்தா, இவை எல்லாவற்றையும் கர்த்தரிடம் அறிவித்து, நான் அம்மோன் புத்திரரோடே யுத்தம் செய்ய போகிறேன். எனக்கு நீங்கள் ஜெயத்தைக் கொடுத்தால், என் வீட்டு வாசற்படியிலிருந்து முதலில் எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ, அது கர்த்தருக்கு உரியதாக்கி, அதை சர்வாங்க தகனப்பலியாக ஒப்புக் கொடுப்பேன் என்று பொருத்தனை செய்தார்.

கர்த்தர் யெப்தாவுக்கு வெற்றியை கொடுத்தார். யெப்தா தன் வீட்டுக்கு வரும்போது, அவனது ஒரே



மகள் அவனுக்கு எதிர்கொண்டு வந்ததால், அவன் கலங்கி, நான் கர்த்தருக்கு பொருத்தனையாக வார்த்தையை சொல்லிட்டேனே, மாற்றமுடியாதே என்று தன் மகளிடம் புலம்பினான். பின்பு வேறு வழியின்றி தன் பிள்ளையை இழந்தான்.

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளா ! தேவ சமூகத்தில் பேசும்போது, கவனமாக இருக்கனும், அவசரப்பட்டு பேசுவது, விளையாட்டுக்கு பேசுவது, மனம் பதறி பேசுவது என்பது ஆபத்தை விளைவிக்கும். யெப்தா அவசரப்பட்டு பேசினதினால் தன் ஒரே பிள்ளையை இழந்தான். அவர் செய்த பொருத்தனை என்பது மிகவும் முட்டாள் தனமானது. அது அவருக்கு ஈடு செய்ய முடியா இழப்பை உண்டாக்கியது. நாம் கர்த்தரோடு நம்மையே பொருத்தனை செய்து, அர்ப்பணிப்போடு வாழ வேண்டும். நம் ஜெப வாழ்க்கை, பைபிள் படிப்பது, சர்ச்சுக்கு வருவது, ஊழியம் செய்வது இது எல்லாம் உன்னதமான ஆசீர்வாதம். நம்முடைய கவனமில்லாத பேச்சினால் இவற்றை இழந்துவிடக் கூடாது. கவனமாக இருப்போம் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : பிரசங்கி 5:2** "தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக."

**– அன்பு ஏசுதாஸ்**

# மதியீனமான உடன்படிக்கை...



ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

கர்த்தருடைய இரக்கத்தினால், மோசே இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து மீட்டு, கானான் தேசத்தை நோக்கி வழிநடத்தி வந்தார். அவருக்குப் பிறகு யோசுவா என்பவர் வழிநடத்தினார். அப்பொழுது அவர்கள் எரிகோ என்ற பட்டணத்தின் மதிலை தேவனுடைய வல்லமையினாலே கடந்து வந்தார்கள். அதற்கு அடுத்தப்படியாக ஆயி என்ற பட்டணத்தையும் தேவ வல்லமையினாலே முறியடித்தார்கள். இவைகளை கேள்விப்பட்ட கிபியோன் என்ற நாட்டு மக்கள் தங்களை காப்பாற்றிக் கொள்ள தந்திரமாக ஒரு யோசனை பண்ணினார்கள்.

அதென்னவென்றால் தங்களை தூரத் தேசத்தை சேர்ந்தவர்களைப் போல காண்பித்து, நாங்கள் உங்களுக்கு அடிமைகளாகயிருப்போம் என்று யோசுவாவிடம் சொன்னார்கள். யோசுவாவும் அவர்களுக்கு அனுமதி கொடுத்து அவர்களோடே உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டான். நாட்கள் செல்ல செல்ல இந்த கிபியோனின் குடிமக்கள் பழையபடி இஸ்ரவேல் ஜனங்களை விக்கிரகங்களை வணங்குவதிலும், மேலும் இன்னும் அநேக செய்யும் பாவங்களில் ஈடுபடச் செய்தனர்.

ஆனால் தேவன் முன்னாடியே யோசுவாவிடம் என்ன சொல்லியிருந்தார் தெரியுமா? யாரோடும் உடன்படிக்கை செய்யாதே ! யாரையும் உள்ளே அனுமதிக்காதே ! என்று சொல்லியிருந்தார் யோசுவா அதை மீறி முட்டாள்த்தனமாக எடுத்த முடிவினாலே



இஸ்ரவேல் ஜனங்கள், தேவன் விரும்பாதவைகளை செய்து பாவம் பண்ணினார்கள். அது அவர்களுக்கு அழிவை கொண்டு வந்தது.

குட்டீஸ் ! யோசுவா பெரிய வெற்றியாளர் தான். ஆனால் கடவுள் என்ன சொன்னாரோ அதை செய்யாமல் போனதால் அல்லது மீறி நடந்தால், இஸ்ரவேல் ஜனங்களை பாவஞ் செய்ய வழிவகுத்த மாதிரி, நாமும் தேவனுடைய வார்த்தையை மீறி நடந்தால் அல்லது அதின்படி செய்யாமற் போனால் நாமும் பாவஞ் செய்கிறோம். பிறர் பாவம் செய்ய காரணமாகவும் ஆகிவிடுவோம். அதனால் கவனமாக வாழ்வோம்.

**மனப்பாட வசனம் : 2 கொரிந்தியர் 6:16** "தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

– குயினி பிரதீப்

# மதியீனமான விருப்பம்

சிறுவர் பகுதி

அன்பான மழலைச் செல்லங்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுவின் பெயரால் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் மதியீனமான அதாவது ஞானமற்ற மற்றும் நியாயமற்ற ஆசை கொண்ட ஒருவரை பற்றி, ஆண்டவர் சொன்னதை தெரிஞ்சுக்கலாமா?

ஆண்டவர் இயேசு, தன்னை பின்பற்றுகின்ற சீடர்களுக்கு ஞானத்தினை கற்றுத்தர, உவமைகள் மூலமாக பேசுவதை வழக்கமாக கொண்டிருந்தார். அப்படித்தான் ஒருமுறை மனிதர்கள் யாரிடமும் இருக்கக்கூடாத முட்டாள்தனமான ஆசைகளுள் ஒன்றான பொருளாசையை குறித்து ஒரு



உவமையைச் சொன்னார். அந்த உவமை என்னவென்றால், ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன் ; நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு, ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான்.

தேவனோ அவனை நோக்கி; மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவனாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.

நமது ஆண்டவர் அந்த பணக்காரனை முட்டாள் என்றும், அவனது ஆசையை முட்டாள்தனமானதும் என்றும் எச்சரித்தார். ஏனெனில் சுயநலமாக வாழ்வது என்பது ஞானமான செயல் அல்ல. ஆகையால், செல்லங்களா ! ஆண்டவர் நமக்கு கொடுத்ததை பகிர்ந்து கொடுப்போம். நாம் மாத்திரம் நன்றாக இருந்தால் போதும் என நினைக்கக் கூடாது. இந்த உலகம் அதிலுள்ள யாவும் கர்த்தருடையது. ஆனாலும் கர்த்தர் அதனை நமக்கு கொடுத்துள்ளார். பரலோகமும் கர்த்தருடையது தான், அதனை நமக்கு தருவேன் என வாக்குறுதி அளித்துள்ளார். நம்மில் அநேகருக்கு Sharing பண்ற பழக்கம்கூட இல்லாதிருக்கலாம். ஆனால், இன்றைய நாளிலிருந்து ஆண்டவருக்கு பிடித்த பிள்ளைகளா, ஆண்டவரை போல மாறுவோம்.

**மனப்பாட வசனம்: ரோமர் 12:8** "புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக் கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.

**– பிரியா ஆண்டனி**


## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.


## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. K. கெட்ஸி நேசகுமாரி – மதுரை
2. K. பெட்டி பேபி ராணி – மதுரை
3. S. லட்சிதா – கரூர்
4. S. கனிஸ்கா – கரூர்
5. M. ஜோனா – கரூர்
6. A. ஹானா ஜோதி – மதுரை
7. M. ராஜா – கரூர்
8. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
9. K. பிளஸ்ஸி தேவகிருபை – மதுரை

# மதியீனமான செயல்...

ஹாய் செல்லக்குட்டீஸ் ! உங்கள் எல்லாருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே வாழ்த்துக்கள் மற்றும் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாதமும், வேதாகமத்திலிருந்து புதுப்புது சம்பவங்களை பற்றி படித்து, அதிலிருந்து தேவன் நமக்கு கற்றுக்கொடுக்கக் கூடிய நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக் கொண்டு, அவற்றை பயிற்சி செய்கிறீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

இந்த மாதமும், ஒரு சிறப்பான சம்பவத்தைப் பற்றி பார்க்கப் போகிறோம். பார்க்கலாமா?

சவுல் என்னும் ஒரு இராஜா இருந்தார். இஸ்ரவேல் மக்களை ஆட்சிசெய்து வழி நடத்தும்படியாக, சாமுவேல் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாக, சவுலை இராஜாவாக, கர்த்தர் அபிஷேகம் செய்தார்.

இராஜாவாகிய சவுல், பலபோர்களில் வெற்றி கண்டவர். கடவுள் சொல்லிய வார்த்தைகளை கேட்டு கீழ்ப்படிந்ததினால் சவுல் இராஜா அனைத்து போர்களிலும் வெற்றி கண்டார்.

ஒரு முறை அமலேக்கியர்களோடு, யுத்தம் செய்யும் சூழல் வந்தபோது, சவுல் ராஜா, சாமுவேலிடம் யுத்தத்திற்கு போகலாமா? வேண்டாமா? என கர்த்தரிடம் கேட்டு சொல்லுங்கள் என்றார்.

சாமுவேல் தீர்க்கதரிசியும், அமலேக்கியர்களிடம் போர் செய்யும்போது, அவர்களில் ஒருவரையும் உயிரோடுவிட்டு வைக்கக்கூடாது. குழந்தைகள், பிள்ளைகள், ஆண்கள், பெண்கள், ஆடுகள், மாடுகள், மிருக ஜீவன்கள் என்று எல்லாவற்றையும் கொன்று போட்டுவிடுங்கள் என்று தேவன் சொல்கிறார் என்று சவுல் இராஜாவிடம் சொன்னார். ஆனால் சவுல்ராஜா கர்த்தருடைய கட்டளையை மீறி எல்லா மிருக ஜீவன்களையும் கொன்று போடாமல், சில மிருகங்களை மட்டும், தேவனுக்கு பலி செலுத்துவதற்கு உயிரோடே கொண்டு வந்தார்கள். கடவுள் சொல்லிய வார்த்தைகளுக்கு கீழ்படியாமல் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி நடந்ததால், கடவுளுடைய கோபம் சவுல் ராஜாவிடம் திரும்பியது;

அப்பொழுது தேவன், நான் சொல்லிய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் போனதினால்



இனி நீ இராஜாவாக இருக்க போவதில்லை என்று அவரை இராஜாவின் பதவியிலிருந்து விலக்கினார்.

செல்லங்களா ! என்ன இந்த சவுல் இராஜாவினுடைய சம்பவத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் என்ன? கீழ்ப்படிதல், கர்த்தருக்கு, அவருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்தல் ஆம் இனிவரக்கூடிய நாட்களில் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்து கீழ்ப்படிவீர்கள்! என்று நம்புகிறேன். மீண்டும், மற்றொரு சம்பவத்தில் சந்திக்கலாம்.

**மனப்பாட வசனம் : லூக்கா 6:46** “என்னை ஆண்டவரே ! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?

**– ஏஞ்சலின் கமலம்**

## பொதுவான செய்திகள்

| | | |
|---|---|---|
| Thumbnail | - | சிறுபடம் |
| Meme | - | போன்மி |
| Print Screen | - | திரைப்பிடிப்பு |
| Inkjet | - | மைவீச்சு |
| Laser | - | சீரொளி |
| WhatsApp | - | புலனம் |
| youtube | - | வலையொளி |
| Instagram | - | படவரி |
| WeChat | - | அளாவி |
| Messenger | - | பற்றியம் |

## ஏப்ரல் மாத கேள்விகள்

1. தேவன் இல்லை என்று சொல்கின்றவர்கள் எப்படிபட்டவர்கள்?
2. எதற்கு மயங்குகிறவன் ஞானவானல்ல என சாலமோன் கூறுகின்றார்?
3. எதனை குடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஐயோ என ஏசாயா எச்சரிக்கின்றார்?
4. தன் உதடுகளை மூடுகிறவன் எப்படிபட்டவன்?
5. "சொற்களின் மிகுதியால் பாவமில்லாமற் போகாது" என வாசிப்பதெங்கே?
6. தன் இருதயத்தினை நம்புகின்றவன் எப்படிபட்டவன்?
7. மனுஷனுக்கு செம்மையாக தோன்றுகின்ற வழியின் முடிவு என்ன?
8. மதுபான வெறி என்பது எதற்கு ஏதுவானது?
9. வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் எதனை சுதந்தரிப்பதில்லை?
10. ஞானத்தில் குறையுள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும் என யாக்கோபு சொன்னார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-05-2022**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. 2 யோவான் 10
2. யோவான் 16:13
3. ரோமர் 16:9
4. 1 தீமோ 4:7
5. நீதிமொழி 19:27
6. சங்கீதம் 119:131
7. யாக்கோபு 1:22
8. மத்தேயு 13:23
9. மத்தேயு 11:29
10. மத்தேயு 13:9

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. A. டேவின் ஜெயச்சந்திரன் - மதுரை
2. Mrs. செல்வமணி ஜேம்ஸ் - சேலம்
3. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
4. Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
5. Dr. D.S. ஜெபநேசன் - திண்டுக்கல்
6. G. பீற்றர் பால்ராஜ் - ஆறுமுகநேரி
7. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
8. A. ரோஸ்மேரி - சென்னை
9. Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
10. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
11. Mrs. பிரேமா பால்சிங் - தென்காசி
12. Mrs. மேரிராஜ் - மதுரை
13. T. மேரி சுமதி - திருச்சி
14. P. பிரபாவதி - மூலனூர்
15. D. மீனாள் - மூலனூர்
16. S. பாக்கியராஜம் - மதுரை
17. D. குளோரி திலகவதி - சென்னை
18. D. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
19. A. ஆனந்த கதிரோன் - சென்னை
20. Mrs. இந்திரா பாண்டி - திருமங்கலம்
21. P. சூரிய பிரியா - திருமங்கலம்
22. Mr. சூசை மரியான் - சென்னை
23. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் - மதுரை
24. R. சரோஜா - தென்கலம்
25. Mrs. செல்லத்தாய் சுவாமி - மதுரை
26. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
27. Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
28. S. டேவிட் சாந்தகுமார் - தென்காசி
29. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
30. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
31. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
32. A.G. சாமுவேல் - தூத்துக்குடி
33. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
34. Mrs. D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
35. Mrs. ஹெப்ஸிமா தாமஸ் - படப்பை
36. D. அலெக்சாண்டர் சாமுவேல் - சென்னை
37. G. ஏஞ்சலம்மாள் - மதுரை
38. J. விஜய் - மதுரை
39. P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
40. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
41. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
42. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
43. C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்


Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th April 2022
Posted at Arasaradi HPO on 10th 11th April 2022

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைப்பிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

**If undelivered please return to :**

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To